**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 21. ஸ்ரீரசிகமுராரி [இவரது வரலாற்றுடன் இதில் வரும் யானையின் வரலாறும் மனிதர்களுக்கு உயர்ந்த பாடம் ஆகும்.குருவாயூர்க் கேசவன், ஸ்ரீரங்கம் ஆண்டாள் யானை ஆகியன இன்றும் நம் முன் உள்ள உதாரணங்கள்]**

---

**வரலாறு உணர்த்தும் கருத்துக்கள்**:

* இறைவனின் நாமங்கள் ஸ்ரத்தையுடனும் ஸ்திடகாத்ர விழிப்புணர்வுடன் ஜெபிக்கும் போது மிகவும் பலன் தரும் சக்தி கொண்டவை.

* மனிதனைப் போல பிற உயிரினங்களுக்கும் ஆன்மீக விழிப்புணர்வு உண்டு.

* மனமாற்றம் ஏற்பட ஒவ்வொருவரும் சமூஹத்தில் ஒத்துழைப்பு தர வேண்டும்.

சாயனம் ஒரு அழகிய மத்யப்ரதேச நகர்.அதை ஆட்சி செய்த மன்னன் தான் ப்ரம்ம கேசரி.அவ்வூரில் சிறந்த பக்தராய், ஆன்மீக குருவாய், எளியவராய், அனைவருக்கும் தோழராய் வாழ்ந்தவர் தான் ரசிகமுராரி.இவரது குரு தயார்னவ்ஜி.

ரசிகமுராரியை அன்புடன் பாகவத மரியாதை மூலம் தோழராகப் பெற்ற ப்ரம்ம கேசரி, அவரது குருவையே தனக்கும் குருவாகப் பெற்றான்.குரு காணிக்கையாக 4 க்ராமங்களை அளித்தான்.அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அவர் பல சமூஹ நலத்திட்டங்களை மேற்கொண்டு ஈஸ்வர பணி செய்தார்.

**கை மாறிப் போன க்ராமங்கள்**

சில காலத்தில் பக்கத்து தேசத்து மன்னன் ஒருவனின் படை எடுப்பால் இக்ராமங்கள் கைமாறிப் போயின.இதனால் வருமானம் இல்லாமல் இறைப்பணிகளும் சமூஹ நலப்பணிகளும் தட்டைப்பட்டன.இதனால் கவலை கொண்ட குரு ரசிகமுராரியை அழைத்து மன்னனிடம் சொல்லி, அக்ராமங்களை மீண்டும் யாசகம் கேட்டுப் பெற்றுத் தரும்படி வேண்டிட, தான் இவரே செல்வதாகக் கூறி வேற்று தேசம் புறப்பட்டார்.

ரசிகமுராரியின் வருகையின் நோக்கத்தைப் புரியாத அவ்வூர் அரசன் யானைக்கு மதம் உண்டாகி இவரைக் கொல்ல ஏவினான்.

**மதம் மாறிய யானை**

யானை இவரை நோக்கி வர, இவரோ ஸ்ரீநரசிம்ஹ ஸ்துகளைச் செய்து, ஸ்ரத்தையுடன் ஸ்ரீராம நாம பஜனாவளியை மேற்கொள்ள ஊராரும் இவருடன் கலந்து கொள்ள யானை அடங்கிப் போனது.யானையின் காதில் இவர் ஸ்ரீராம நாமத்தைத் தொடர்ந்து கத்திக் கத்தி ஓத யானை முற்றிலும் தன் வசம் இழந்து சாந்தமயம் ஆயிற்று.

இந்நிகழ்ச்சி மூலம் இவரது உண்மையான நோக்கத்தை அறிந்த மன்னன் க்ராமங்களை ஒப்படைத்தான்.யானையோ இவரையே பின்தொடர்ந்து சயான நகருக்கும் வந்து விட குரு அதை வளர்த்தார்.

யானை மனிதனைப் போலவே பாகவத பக்தியை மேற்கொண்டதை ஊரார் அறிந்து வியந்தனர்.பலர் யானையைப் பார்த்து மனம் மாறினர்.

**டில்லிக்குச் சென்ற யானை**

அச்சமயத்தில் டில்லிக்கு அரசனாக இருந்த ஒரு இஸ்லாமிய மன்னன் இந்த யானையின் மீது ஆசை கொண்டு ரசிகமுராரியையும் அவரது குருவையும் நாடி வந்தான்.தூய பாகவத அன்புக்கும் அன்பர்களுக்கும் யானை பணியும் என்று அவர்கள் கூறக் கேட்டு, அவனும் அவன் வீரர்களும் உருவத்தை மாற்றிக் கொண்டு வந்தனர்.யானையும் கட்டுப்பட்டது.இவர்களும் அதைக் கோட்டைக்கு அழைத்துச் சென்று வேஷம் நீங்கி அதைப் போர் யானையாக மாற்றப் பயிற்சிகளைத் தொடங்கினர்.இதனால் உண்மை தெளிந்த யானை மனம் உடைந்து பட்டினி கிடந்து இறந்தது.

**மனம் மாறிய மன்னன்**

இதனால் உண்மை உணர்ந்த இஸ்லாமிய அரசன் மனம் மாறி, மதம் வேறு, ஆன்மீகம் வேறு, பக்தி ஒன்றே என்று உணர்ந்து ரசிகமுராரியிடம் பாவ மன்னிப்பு கேட்டான்.யானையால் திருந்திய அரசனை முராரி மன்னித்தார்.அவனது அறியாமையை எடுத்து விளக்கி மனமாற்றத்துக்கு வழிசெய்தார்.

**மன்னன் செய்த ப்ராயசித்தம்**

அக்காலம் முதல் அவன் தன் ஊரில் மத த்வேஷம் பாராமல் அனைத்து மதத்தையும் ஏற்றுக் கொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்து வந்தான்.

ஹரி ஓம்!